

முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களை நேற்று முன்தினம் (20.9.2023) தலைமைச் செயலகத்தில், தியாகி இம்மானுவேல் சேகரனார் அவர்களுக்கு பரமக்குடியில் திருவுருவச் சிலையுடன் கூடிய மணிமண்டபம் அமைக்கப்படும் என்று அறிவித்தமைக்காக, தியாகி இம்மானுவேல் சேகரனார் அவர்களின் மகள் திருமதி. பிரபாராணி மற்றும் பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் ஆர்.எஸ். ராஜகண்ணப்பன், ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் திருமதி. என். கயல்விழி செல்வராஜ், தமிழ்நாடு அரசின் தில்லி சிறப்புப் பிரதிநிதி ஏ.கே.எஸ். விஜயன், சட்டமன்ற உறுப்பினர்கள் காதர்பாட்சா முத்துராமலிங்கம், திருமதி.ர.தமிழரசி, சண்முகையா, செ.ஸ்டாலின் குமார், செ.முருகேசன். திருமதி.க.சிவகாமசுந்தரி, ராஜா ஈஸ்வரன், சட்டமன்ற முன்னாள் உறுப்பினர் அ. அசோகன், மக்கள் விடுதலை கட்சியின் நிறுவனரும், சட்டமன்ற முன்னாள் உறுப்பினருமான முருகவேல்ராஜன், தேவேந்திரர் பண்பாட்டு கழகத்தின் தலைவர் பாலா, செல்வகுமார், பாலு, பூமிநாதன், ஜெயச்சந்திரன், சுரேஷ், மாரியப்பன், கிருஷ்ணமூர்த்தி, சங்கர், அய்யப்பன், சிவக்குமார், எம்.ஆர். சங்கர் ஆகியோர் சந்தித்து நன்றி தெரிவித்துக் கொண்டனர்.

முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (20.9.2023) சென்னை, கலைவாணர் அரங்கத்தில், விகடன் குழுமத்தின் சார்பில் நடைபெற்ற "கலைஞர் 100 விகடனும் கலைஞரும்" நூல் வெளியீட்டு விழாவில் அமைக்கப்பட்ட முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் வாழ்க்கை வரலாற்று நிகழ்வுகளைப் பற்றிய புகைப்படக் கண்காட்சியை பார்வையிட்டார். உடன் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாநில தலைவர் இரா.முத்தரசன், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலச் செயலாளர் கே.பாலகிருஷ்ணன், மக்கள் நீதி மய்யத்தின் தலைவர் கலைஞானி கமல்ஹாசன், விகடன் குழுமத்தின் நிர்வாக இயக்குநர் பா. சீனிவாசன், தி இந்து குழுமத்தின் இயக்குநர் என். ராம், தினமலர் இணை ஆசிரியர் கிருஷ்ணமூர்த்தி, ஆனந்த விகடன் ஆசிரியர் தி. முருகன் ஆகியோர் உள்ளனர்.

முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களை நேற்று முன்தினம் (20.9.2023) அவரது இல்லத்தில், அண்மையில் திருமணம் நடைபெற்ற நெய்வேலி சட்டமன்ற உறுப்பினர் சபா. ராசேந்திரன் மகன் சபா. இரா. சுமந்த் – திருமதி தனரஞ்சனி ஆகியோர் சந்தித்து வாழ்த்துப் பெற்றனர். உடன் தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர் சி.வி. கணேசன் மற்றும் மணமக்களின் குடும்பத்தினர் உள்ளனர்.

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (20.9.2023) தலைமைச் செயலகத்தில், குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை சார்பில் தமிழ்நாடு பட்டியலினத்தவர் / பழங்குடியினர் புத்தொழில் நிதித்திட்டத்தின் கீழ் 8 நிறுவனங்களுக்கு 10 கோடியே 85 இலட்சம் ரூபாய் பங்கு நிதி வழங்குவதற்கான ஒப்புதல் ஆணைகளை வழங்கினார். இந்த நிகழ்ச்சியில், குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ. அன்பரசன், தலைமைச் செயலாளர் சிவ் தாஸ் மீனா, குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை செயலாளர் (பொறுப்பு) வி. அருண் ராய், தமிழ்நாடு புத்தொழில் மற்றும் புத்தாக்க நிறுவனத்தின் தலைமை நிர்வாக அலுவலர் சிவராஜா இராமநாதன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள், விபத்தில் பாதிக்கப்பட்ட மதுரை மாவட்டத்தைச் சேர்ந்த ஜூடோ விளையாட்டு வீரர் ஆர்.பரிதி விக்னேஸ்வரனை நேற்று முன்தினம் (20.09.2023) நேரில் சந்தித்து, தமிழ்நாடு சாம்பியன்ஸ் அறக்கட்டளை சார்பில் ரூ.2 இலட்சம் நிதியுதவியினை வழங்கினார். உடன் தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய உறுப்பினர் செயலர் ஜெ. மேகநாதரெட்டி, உள்ளார்.

விபத்தில் பாதிக்கப்பட்ட ஜூடோ விளையாட்டு வீரர்

ஆர்.பரிதி விக்னேஸ்வரனுக்கு ரூ. 2 இலட்சம் நிதி!

அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் வழங்கினார்!

சென்னை, செப். 22-

இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் விபத்தில் பாதிக்கப்பட்ட மதுரை மாவட்டத்தைச் சேர்ந்த ஜூடோ விளையாட்டு வீரர் ஆர். பரிதி விக்னேஸ்வரனுக்கு தமிழ்நாடு சாம்பியன்ஸ் அறக்கட்டளை சார்பில் ரூ.2 இலட்சம் நிதியுதவியினை நேற்று முன்தினம் வழங்கினார்.

இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் விபத்தில் பாதிக்கப்பட்ட மதுரை மாவட்டத்தைச் சேர்ந்த ஜூடோ விளையாட்டு வீரர் ஆர்.பரிதி விக்னேஸ்வரனை நேற்று முன்தினம் (20.09.2023) நேரில் சந்தித்து, தமிழ்நாடு சாம்பியன்ஸ் அறக்கட்டளை சார்பில் ரூ.2 இலட்சம் நிதியுதவி யினை வழங்கினார்.

மதுரை மாவட்டம், கோச்சடை பகுதியைச் சேர்ந்த ஜூடோ விளையாட்டு வீரர் ஆர். பரிதி விக்னேஸ்வரன் கோயம்புத்தூரில் உள்ள ஸ்ரீஈஸ்வர் பொறியியல் கல்லூரியில் முதலாம் ஆண்டு படித்து வந்துள்ளார். இவர் ஜூடோ விளையாட்டில் தேசிய அளவில் கடந்த 2023ஜூலை மாதம் கர்நாடக மாநிலம், பெல்லாரியில் நடைபெற்ற தேசிய கேடட் ஜூடோ போட்டியில் (National Cadet Judo Championship) கலந்து கொண்டு ஐந்தாம் இடம் பெற்றுள்ளார். மேலும், மாநில அளவிலான போட்டிகள் மற்றும் மாவட்ட அளவிலான போட்டிகளில் கலந்து கொண்டு தங்கப் பதக்கங்கள் மற்றும் பல் வேறு பதக்கங்களை வென்றுள்ளார்.

இவர் கடந்த 26/07/2023 அன்று மதுரையில் ஜூடோ பயிற்சிக்காகச் செல்லும் போது ஏற்பட்ட விபத்தில் பாதிக்கப்பட்டதில் இடது காலில் ஒரு பகுதியை இழந்துள்ளார். இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் அவர்கள் பல்வேறு நிகழ்ச்சிகளில் கலந்து கொள்வதற்காக மதுரைக்குச் சென்றார். பாதிக்கப்பட்ட விளையாட்டு வீரரை அமைச்சர் அவர்கள் நேற்று முன்தினம் (20.9.2023) நேரில் சந்தித்து, தமிழ்நாடு சாம்பியன்ஸ் அறக்கட்டளை சார்பில் ரூ.2 இலட்சத்திற்கான நிதியுதவியினை வழங்கினார்.

இந்நிகழ்வின் போது, தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய உறுப்பினர் செயலர் ஜெ. மேகநாதரெட்டி உடனிருந்தார்.